## பரமதபங்கம்

அபாஸ்யது தம: பும்ஸாம் அநபாய ப்ரபா$^{4}$ந்வித:.
அஹீந்த்$^{3}$ர நக$^{3}$ரே நித்யமுதி$^{3}$தோயமஹஸ்கர:

अपास्यतु तमः पुंसां अनपायप्रभान्वितः ।

अहीन्द्र नगरे नित्यमुदितोऽयमहस्करः ॥

1: ##
எண்டள வம்புயத்துள்* இலங்கும் மறுகோண மிசை *
வண் பணிலந்திகிரி* வளைவில் வளைவாய் முசலம் *
திண்கையில் அங்குசம் சீர்* திகழுங் கதை செங்கமலம் *
எண்படையேந்தி நின்றான்* எழிலாழி இறையவனே. (2)

2:
விடு நெறியஞ்சி விடத் தொடக்கிய*
விதியரடைந்து தொழத் தழைத் தெழு *
விழியருள் தந்து விலக் கடிக்களை*
விரகில் இயம்பி விலக்கி வைத்தனர் *

கொடுவினை என்பது அனைத்தினைத் தனை*
கொணர்தல் இகந்த குணத் தனத்தினர் *
குருகையில் வந்து கொழுப் படக்கிய*
குலபதி தந்த குறிப்பில் வைத்தனர் /

கடு நரகன் புகழற்றி மற்றொரு*
கதிபெறும் அன்பில் எமைப் பொருத்தினர் *
கமலை உகந்த கடற் கிடைக்கடல்*
கருணை உயர்ந்த திடர்க் கொருக்கினர் *

படு முதலின்றி வளர்த்த நற்கலை*
பலபல ஒன்ற எமக்குரைத்தனர் *
பழ மறையந்தி நடைக் கிடைச்சுவர்*
பரமதம் என்ற திடித்த பத்தரே.

3:
போமுரைக்கும் பொருள் யாமறியோம்* பொருளார் மறையில் *
தாமுரைக்கின்றன* தாமே அறியும் தரமுடையார் *
ஆமுரைக் கென்றிவை ஆய்ந்தெடுத்து* ஆரண நூல் வழியே *
நாமுரைக்கும் வகை* நல்லருளேந்தி நவின்றனரே.

4:
சித்தும் அசித்தும் இறையுமெனத்* தெளிவுற்று நின்ற *
தத்துவ மூன்றும்* தனித் தனி காட்டும் தனி மறையால் *
முத்தி வழிக்கிது மூலமெனத்* துணிவார்களையும் *
கத்தி மயக்கும்* கதகரை நாம் கடிகின்றனமே.

5:
முத்தின் வடங்களென* முகுந்தன் புனை மூவகையாம் *
சித்திலரும் சுருதிச்* செவ்வை மாறிய சிந்தைகளால் *
பத்திலிரண்டு மெய்க்கப்* பகட்டும் பரவாதியர்தம் *
கத்தில் விழுந்தடைந்த* அழுக்கின்று கழற்றினமே.

6:
நாக்கியலும் வகை* நம்மையளித்தவர் நல்லருளால் *
பாக்கியமேந்திப்* பரனடியார் திறம் பார்த்ததற்பின் *
தாக்கியர் தங்கள் தலைமிசை தாக்கித்* தனிமறைதான் *
போக்கியம் என்றதனில்* பொய் மதங்களைப் போக்குவமே.

7:
தீவகை மாற்றி அன்றோர்* தேரிலாரணம் பாடிய * நம்
தேவகி சீர் மகனார்* திறம் பாவருள் சூடியநாம் *
மூவகை யாமறியாத்* தத்துவத்தின் முக மறிவார் *
நாவகையே நடத்தும்* நடைபார்த்து நடந்தனமே.

8:
வேலைப் புறம் அகங் காண்பது போல்* வேத நன்னெறிசேர் *
நூலைப் புறம் அகங் காண்டலில்* நுண்ணறிவின்றி நின்றீர் *
மாலைப் பெற வழிகாட்டிய* தேசிகர் வாசகமே *
ஓலைப்புறத்தில் எழுதுகின்றோம்* உள்ளெழுதுமினே.

9:
சிறை நிலையாம் பவத்தில்* சிறு தேனின்பமுண்டு உழல்வார் *
மறைநிலை கண்டறியா* மயல் மாற்றிய மன்னருளே *
துறைநிலை பாரமெனத்* துளங்கா அமுதக் கடலாம் *
இறைநிலை யாமுரைத்தோம்* எங் குருக்கள் இயம்பினவே.

10:
வெறியார் துளவுடை* வித்தகன் தன்மையின் மெய்யறிவார் *
குறியார் நெடியவரென்று* ஒருகுற்றம் பிறர்க்குரையார் *
அறியார் திறத்தில் அருள் புரிந்து* ஆரண நன்னெறியால் *
சிறியார் வழிகள் அழிப்பதும்* தீங்கு கழிப்பதற்கே.

11:
மிண்டுரைக்க விரகு தரும் தருக்கங் கொண்டே *
 வேண்டுங்கால் வேண்டுவதே விளம்புகின்றார் *
கண்டதற்கு விபரீதம் கத்துகின்றார் *
 காணாத குறை மறையில் காட்ட நிற்பார் *
பண்டொருத்தன் கண்டுரைத்தேன் நானேயென்னப் *
 பலவகையில் உபாதிகளால் படிந்து வீழ்வார் *
கொண்டல்ஒக்கும் திருமேனி மாயக் கூத்தன் *
 குரைகழல் சேர் விதிவகையில் கூடாதாரே.

12:
கண்டது மெய்யெனில்* காணு மறையில் அறிவு கண்டோம் *
கண்டது அலாதது இலது எனில்* கண்டிலம் குற்றம் இதில் *
கண்டது போல் மறைகாட்டுவதும்* கண்டதுஒத்ததனுல் *
உண்டதுகேட்கும்* உலோகாயதர் என்று மீறுவதே.

13:
கண்டதனுல் காணுதது அனுமிக்கின்ருர் *
கண்டு ஒருத்தன் உரைத்ததனைக் கவருகின்ருர் *
உண்டு பசி கெடுமென்றே உணர்ந்துண்கின்ருர் *
ஒன்ருலே ஒன்றைத் தாம் சாதிக்கின்ருர் *
பண்டு முலையுண்டதனுல் முலையுண்கின்ருர் *
பார்க்கின்ருர் பலவல்லாத் தம்மை மற்றும் *
கண்டு மதி கெட்ட நிலை காணகில்லார் *
காணுதது இலதென்று கலங்குவாரே.

14:
காணுதது இலதெனும் கல்வியினுரைக்* கடிந்ததற் பின் *
கோணுர் குதர்க்கங்கள் கொண்டே* குழப்பும் பவுத்தர்களில் *
நாணுது அனைத்தும் இலதென்றும்* நால் வகையன்றி தென்றும் *
வாணுள் அறுக்கின்ற* மத்திமத்தான் வழிமாற்றுவமே.

15:
மானம் இலை மேயமிலை என்றும் மற்ருேர் *
வாத நெறியிலை என்றும் வாது பூண்ட *
தானுமிலை தன்னுரையும் பொருளுமில்லை *
தத்துவத்தின் உணர்த்தி சயமில்லையென்றும் *
வானவரு மானவரு மனமும் வெள்க *
வளம்பேசு மதிகேடன் மத்திமத்தான் *
தேன நெறி கொண்டனைத்துந் திருடா வண்ணம் *
செழுமதி போல் எழு மதியால் சேமித்தோமே.

16:
முற்றும் சகத்திலதென்றே* பகட்டிய முட்டரை நாம் *
சுற்றும் துறந்து* துறையில் நின்றே துகளாக்கியபின் *
மற்றொன்றிலது மதி பலவுண்டென்று* வஞ்சனையால் *
சற்றும் துறந்த* யோகாசரனைச் சதிக்கின்றனமே.

17:
உளக்கதியை நாம் உள்ளி உள்ளந்தேறி *
உலகத்தார் உகந்து இசைய உலகுண்டென்ருேம் *
இளக்க அரிதாகிய நல் தருக்கஞ் சேர்ந்த *
எழின்மறையில் ஈசனுடன் எம்மைக் கண்டோம் *
விளக்கு நிரை போல் மதிகள் வேருய் * வேறொன்று
அறியாதே விளங்குமென விளம்புகின்ற *
களக் கருத்தன் கண்ணிரண்டும் அழித்தோம் * நாணுக்
காகம்போல் திரிந்தவன் என் கதறுமாறே.

18:
பொருளொன்று இலதென்று* போதமொன்றும் கொண்ட பொய்யரை நாம் *
தெருள்கொண்டு தீர்த்தபின்* காணவொண்ணுப் பொருள் தேடுகின்ற *
மருள் கொண்ட சூதுரைக்கும்* சௌத்திராந்திகன் வண்ணிக்கை நாம் *
இருள் கொண்ட பாழ்ங்கிணரென்று* இகழ்ந்தோட இயும்புவமே.

19:
நிலேயில்லாப் பொருள் மதியை விளேத்துத் தான்சேர் *
 நிறங்கொடுத்துத் தானழியும் தன்ஞல் வந்த *
நிலேயில்லா மதி தன்னில் நிறத்தைக் காணும் *
 இதுகாணும் பொருள் காண் கையென்ற நீசன் *
முலேயில்லாத் தாய்கொடுத்த முலேப்பாலுண்ணும் *
 முகமில்லா மொழியெனவே மொழிந்த வார்த்தை *
தலேயில்லாத் தாள்ஊரும் கணக்காய் நின்ற *
 கட்டளே நாம் கண்டின்று காடினுேமே.

20:
காண்கின்றவனிலே* காட்சியும் கண்டதுமுண்டு அவைதாம் *
ஏண் கொண்டன அன்று* இவற்றில் குணமு நிலேயு மிலே *
சேண் கொண்ட சந்ததியால்* சேர்ந்துமொன்றென நிற்குமென்ற *
கோண் கொண்ட கோளுரை* வைபாடிகன் குறைகூறுவமே.

21:
கும்பிடுவார் ஆரென்று தேடுகின்ருர் *
 குணங்களேயும் தங்களுக்குக் கூறுகின்ருர் *
தம்படியைத் தமர்க்குரைத்துப் படிவிக்கின்ருர் *
 தமக்கினிமேல் வீடென்று சாதிக்கின்ருர் *
தம் புடவை உணல் குறித்து நெடிதெண்கின்ருர் *
 சந்ததிக்குத் தவம் பலிக்கத் தாம் போகின்ருர் *
செம்படவர் செய்கின்ற சிற்றினிப்பைச் *
 சேவகப் பற்றுடனே நாம் செகுத்திட்டோமே.

22:
வேதங்கள் மௌலி விளங்க* வியாசன் விரித்த நன்நூல் *
பாதங்களான பதினுறில்* ஈசன் படி மறைத்துப் *
பேதங்கள் இல்லேயென்று* ஓர் பிரமப் பிச்சு இயம்புகின்ற *
போதம் கழிந்தவனேப்* புத்தர் மாட்டுடன் பூட்டுவமே.

23:
பிரிவில்லா இருளொன்று பிணக்கொன்றில்லாப் *
 பெருவெயிலே மறைத்து உலகம் காட்டுமென்ன *
அறிவில்லா அறிவொன்றை அவித்தை மூடி *
 அகம்புறமென்று இவையனேத்தும் அமைக்குமென்பார் *
செறிவில்லாப் புத்தருடன் சேர்ந்து கெட்டார் *
 சீவனேயும் ஈசனேயும் சிதைக்கப் பார்த்தார் *
நெறியில்லா நேர்வழியும் தானேயானுன் *

நெடுமாலை நாமடைந்து நிலைபெற்றோமே.

24:
சோதனை விட்டு ஒருத்தன் சொல்ல* மெய்யெனச்  சோகதரைச் *
சேதனை யற்றவரென்று* சிதைத்தபின் சீவர்கட்கோர் *
வேதனை செய்கை வெறும் மறமென்று* விளம்பிவைத்தே *
மாதவமென்று மயிர் பறிப்பார்* மயல் மாற்றுவமே.

25:
சொன்னார்தாம் சொன்னதெலாம் துறவோம் என்றும் *
சொன்னதுவே சொன்னது அலதாகுமென்றும் *
தின்னாதுந் தின்னுமதும் ஏகமென்றும் *
சிறியனுமாம் பெரியனுமாம் சீவனென்றும் *
மன்னாது மன்னுமதும் ஒன்றேயென்றும் *
வையமெலாம் விழுகின்ற தென்றுமென்றும் *
தென்னாடும் வடநாடும் சிரிக்கப் பேசும் *
சினநெறியார் சினமெல்லாம் சிதைத்திட்டோமே.

26:
ஏகாந்திகம் ஒன்றுமில்லையென்று* ஆசையைத் தாமுடுப்பார் *
சோகாந்தமாகத் துறப்புண்டபின்* தொழில் வைதிகமென்று *
ஏகாந்திகள் சொன்ன* ஈசன் படியில் விகற்பமெண்ணும் *
லோகாந்த வீணர்தம்* வேதாந்த வார்த்தை விலக்குவமே.

27:
ஒன்றெனவும் பலவெனவும் தோற்றுகின்ற *
உலகெல்லாம் ஒரு பிரமன் தானே யாக்கி *
நன்றெனவும் தீதெனவும் பிரிந்தவெல்லாம் *
நன்றன்று தீதன்றே என நவின்றார் *
கன்றும் அலர் பசுவுமலராகி நின்றே *
கன்றாகிப் பசுவாகி நின்றவண்ணம் *
இன்று மறை மாட்டுக்கு ஓரிடையனான *
ஏகாந்தி இசைந்திட நாம் இயம்பினோமே.

28:
சாயா மறைகளில்* சத்தந் தெளிந்திடச் சாற்றுதலால் *
தூயார் இவரென்று* தோன்ற நின்றே பல சூதுகளால் *
மாயா மதமும் மறு சின வாதும்* பவுத்தமும் சேர் *
வையாகரணர் சொல்லும்* மறு மாற்றங்கள் மாற்றுவமே.

29:
கலகத்தில் கலங்கி வரும் காணிக்கெல்லாம் *
கண்ணாறு சதிரவழி கட்டுவார் போல் *
உலகத்தில் மறை சேர்ந்த உரைகள் தம்மால் *
ஒரு பிழையும் சேராமல் உபகரித்தார் *
பல கத்தும் பவுத்தர் முதலான பண்டைப் *
பகற் கள்ளர் பகட்டழிக்கப் பரவும் பொய்யாம் *

சிலகற்றுச் சித்தாந்தம் அறியகில்லாச் *
 சிறுவர் இனி மயங்காமல் சேமித்தோமே.

30:
கண்டது அலாதன கட்டுதலால்* கண்ட விட்டதனுல் *
பண்டுளதான மறைக்குப்* பழமையை மாற்றுதலால் *
கொண்டதும் ஈசனைக்* கொள்ளா வகையென்று கூறுதலால் *
கண்டகராய் நின்ற* காணுதர் வாதம் கழற்றுவமே.

31:
ஆகமத்தை அனுமானம் என்கையாலும் *
 அழியாத மறையழிக்க நினைத்தலாலும் *
போக மற்றொரு பலம் போற் கிடக்கை தானே *
 புண்ணியர்க்கு வீடென்று புணர்த்தலாலும் *
மாகமொத்த மணிவண்ணன் படியை மாற்றி *
 மற்றவனுக்கொரு படியை வகுத்தலாலும் *
காகமொத்த காணுத தன் கண்ணை வாங்கிக் *
 காக்கைக்கு ஆர் என்று அலற்றக் காட்டினேமே.

32:
கோதம நூல்களைக்* குற்றமிலாவகை கூட்டலுமாம் *
கோது கழித்து ஒருகூற்றில்* குணங்களைக் கொள்ளவுமாம் *
யாது மிகந்து* ஒருநீதியை யாமே வகுக்கவுமாம் *
வேதியர் நல் நய வித்தரமென்பது* மெய்யுளதே.

33:
நான்மறைக்குத் துணையாக நல்லோரெண்ணும் *
 நாலிரண்டில் ஒன்ருன நய நூல்தன்னில் *
கூன்மறைத்தல் கோது உளது கழித்தல் மற்ருேர் *
 கோணுத கோதில் வழி வகுத்தலன்றி *
ஊன்மறைத்த உயிரொளி போல் ஒத்தது ஒவ்வாது *
 உயிரில்லா காணுத முரைத்தவெல்லாம் *
வான்மறைக்க மடிகோலும் வண்ணமென்றொம் *
 மற்றிதற்கார் மறுமாற்றம் பேசுவாரே.
34:
ஈசனும் மற்றணங்கும் இலதென்று* எழில் நான்மறையில் *
பேசிய நல்வினையால்* பெரும் பாழுக்கு நீரிறைக்கும் *
நீசரை நீதிகளால்* நிகமாந்தத்தின் நூல் வழியே *
மாசின் மனங்கொடுத்தும்* மறுமாற்றங்கள் மாற்றுவமே.

35:
கனைகடல்போல் ஒருநீராம் சூத்திரத்தைக் *
 கவந்தனையும் இராகுவையும் போலக்கண்டு *
நினைவுடனே நிலைத் தருமம் இகந்து நிற்கும் *
 நீசர் நிலை நிலைநாட வண்ணம் எண்ணி *
வினைபரவு சைமினியார் வேதநூலை *
 வேதாந்த நூலுடனே விரகால் கோத்த *

முனையுடைய முழுமதி நம் முனிவர் சொன்ன *
 மொழிவழியே வழியென்று முயன்றிட்டோமே.

36:
முக்குணமாய் நின்ற* மூலப் பிரகிருதிக்கு அழியா *
அக்குணமற்ற அருத்துணை* மற்றதற்கு ஈசனிலை *
இக் கணனைப்படி ஐயைந்தும் எண்ணில்* முன் முத்தியென்னும் *
பக்கண வீணர்* பழம்பகட்டைப் பழுதாக்குவமே.

37:
ஈசனிலன் என்பதனால் என்றும் சீவர் *
 எங்குமுளர் இலர் உணர்வை என்றவத்தால் *
பாசமெனும் பிரகிருதி தன்னால் என்றும் *
 பலமுமிலை வீடுமிலை என்னும் பண்பால் *
காசினி நீர் முதலான காரியங்கள் *
 கச்சபத்தின் கால்கைபோலென்னும் கத்தால் *
நாசமலதிலை காணும் ஞாலத்துள்ளீர் *
 நாமிசையாச் சாங்கியத்தை நாடுவார்க்கே.

38:
தாவிப் புவனங்கள்* தாளிணை சூட்டிய தந்தை உந்திப் *
பூவில் பிறக்கினும்* பூதங்களெல்லாம் புணர்த்திடினும் *
நாவில் பிரிவின்றி* நாமங்கை வாழினும் நான்மறையில் *
பாவித்ததன்றி உரைப்பது* பாறும் பதர்த்திரளே.

39:
காரணனாய் உலகளிக்கும் கண்ணன் தேசைக் *
 கண்ணாடி நிழல் போலக் காண்கையாலும் *
தாரணையின் முடிவான சமாதி தன்னைத் *
 தனக்கேற்றும் விளக்கென்று தனிக் கையாலும் *
காரணமாம் அதுதனக்குப் பயனும் சீவன் *
 கைவலிய நிலையென்று கணிக்கையாலும் *
கோரணியின் கோலமெனக் குறிக்கலாகும் *
 கோகனகத்து அயன் கூறும் சமயக் கூறே.

40:
சாதுசனங்களெலாம்* சச்சையென்னும் சலம் புணர்த்தார் *
கோதம சாபமொன்றால்* கொடுங் கோலங்கள் கொண்டுலகில் *
பூதபதிக்கு அடியாரென நின்று* அவன் பொய்யுரையால் *
வேதம் அகற்றி நிற்பார்* விகற்பங்கள் விலக்குவமே.

41:
மாதவனே பரனென்று வையம் காண *
மழுவேந்தி மயல் தீர்க்க வல்லதேவன் *
கைதவம் ஒன்று உகந்தவரைக் கடியசாபம் *
கதுவியதால் அதன் பலத்தைக் கருதிப் பண்டை *
வேத நெறி அணுகாது விலங்குதாவி *

வேருக விரித்துரைத்த விகற்பமெல்லாம் *
ஓதுவது குத்திரத்துக்கு என்றுரைத்தான் *
ஓதாதே ஓதுவிக்கும் ஒருவன் தானே.

42:
கந்தமலர் மகள் மின்னும் காரார் மேனிக் *
 கருணை முகில் கண்ட கண்கள் மயிலாய் ஆலும் *
அந்தமில் பேரின்பத்தில் அடியரோடே *
 அடிமையெனும் பேரமுதம் அருந்தி வாழத் *
தந்தமதி இழந்துஅரனுர் சமயம் புக்குத் *
 தழல் வழிபோய்த் தடுமாறித் தளர்ந்து வீழ்ந்தீர் *
சந்த நெறி நேரறிவார் சரணம் சேர்ந்து *
 சங்கேதத்து அவம் முனிவீர் தவிர்மினீரே.

43:
யாதும் இலாதவன்றும்* யவர்க்குந் நன்றியெண்ணிய * நம்
மாதவனுர் வதனத்து அமுதுண்ணும்* வலம்புரிபோல் *
வாதுகளால் அழியா மறை* மௌலியின் வான்பொருளே *
ஓதிய பஞ்சாத்திர முகவாரை* ஒழுக்குவமே.

44:
பூ அலரும் திருஉந்திப் புனிதன் வையம் *
 பொன்னடியால் அளந்து இருவர் போற்றிநின்ற *
நாவலரும் கலைகளெலாம் தன்னை நாட *
 நாடாத நன்னதியா நனுகு நாதன் *
கோவலனுய் நிரையளித்த நிறைபோல் வேதம் *
 கோவாகக் கோமானுய் தன் பால்சேர்த்துக் *
காவலிது நல்லுயிர்க்கு என்று காட்டும் *
 கார்த்தயுகக் கதி கண்டோம் கரை கண்டோமே.

45:
நமக்கார் துணையென* நாம் என்று அருள் தரு நாரணனுர் *
உமக்கு ஆறு இவையென்று இடியிணை காட்ட* உணர்ந்தடையும் *
எமக்கோர் பரமினியில்லாது* இருவினை மாற்றுதலில் *
தமக்கே பரமென்று* தர முயலும் தரம் சாற்றுவமே.

46:
பலத்திலொரு துவக்கற்ற பதவிகாட்டிப் *
 பல்லுயிரும் தடுமாறப் பண்ணுகின்ற *
கலித்திரளின் கடுங் கழுதைக் கத்து மாற்றிக் *
 கண்ணுடையார் கண்டுரைத்த கதியைச் சொன்னேம் *
வலத்து இலகு மறுவொன்றல் மறுவொன்றில்லா *
 மாமணியாய் மலர் மாதர் ஒளியாம் அங்நல் *
நலத்திலொரு நிகரில்லா நாதன் பாதம் *
 நல் வழியாம் அல்வழக்கார் நடத்துவாரே.

47:
எல்லார்க்கும் எளிதான ஏற்றத்தாலும் *
 இனியுரைக்கை மிகையான விரக்கத்தாலும் *
சொல் ஆர்க்கும் அளவாலும் அமைதலாலும் *
 துணிவரிதாய்த் துணைதுறக்கும் சுகரத்தாலும் *
கல்லார்க்கும் கற்ருர் சொற் கவர்தலாலும் *
 கண்ணனுரை முடிசூடி முடித்தலாலும் *
நல்லார்க்கும் தீயார்க்கும் இதுவே நன்றும் *
 நாரணற்கே அடைக்கலமாய் நணுகுவீரே.

48:
பண்டைமறைக்குப்* பகையென நின்ற பரமதங்கள் *
கொண்டவர் கொள்ளும்* பயன் ஒன்றிலதெனுங் கூர் மதியால் *
வண் துவரைக்கு அரசான* நம்மாயனை வானுலகில் *
கண்டு களிப்பதெனும்* காதலொன்றைக் கருதுவமே.

49:
கலந்திகழும் போகங்கள் கண்டுவெள்கிக் *
 காரியமும் காரணமும் கடந்து நாம் போய்க் *
குலந்திகழும் குருக்களடி சூடி மன்னும் *
 குற்றேவல் அடியவர்தங் குழாங்கள் கூடி *
வலந் திகழும் திருமகளும் மற்றிடத்தே *
 மன்னிய மண் மகளாரும் நீளையாரும் *
நலந்திகழ வீற்றிருந்த நாதன் பாதம் *
 நமக்கு இதுவே முடியென்ன நண்ணினேமே.

50:
மானங்களின்றி வகுத்துறைக்கின்ற* மதங்களெலாம் *
தானங்களன்று* தரும நெறிக்கென்று சாற்றியபின் *
வானங் கவர்ந்து* மறைமுடி சூடிய மாதவத்தோர் *
ஞானங்கள் ஒன்ற நடக்கின்ற* நல்வழி நாடுவமே.

51:
தன்னடிக்கீழ் உலகேழையும் வைத்த* தனித்திருமால் *
பொன்னடிக்கு ஏற்கின்ற* புண்ணியர் கேண்மின் புகலறிவார் *
முன்னடி பார்த்து முயலுதலால்* அவர் சாயையெனப் *
பின்னடி பார்த்து நடந்து* பெரும் பதமேறுவமே.

52:
வையமெலாம் இருள் நீக்கு மணிவிளக்காய் *
மன்னிய நான்மறை மௌலி மதியே கொண்டு *
மெய்யலது விளம்பாத வியாசன் காட்டும் *
விலக்கில்லா நல்வழியே விரைந்து செல்வீர் *
ஐயமற அறுசமயக் குறும்பறுத்தோம் *
அணியரங்கர் அடியவர்க்கே அடிமை செய்தோம் *
மையகடல் வட்டத்துள் மற்றும் தோற்றும் *
வாதியர்தம் வாய்ப்பகட்டை மாற்றினோமே.

53: ##
கோதவம் ஒன்றில்லாத தகவேகொண்ட *
கொண்டலென வந்துலகில் ஐவர்க்கன்று ஓர் *
தூதுவனாய் ஒரு கோடி மறைகளெல்லாம் *
தொடர்ந்தோடத் தனியோடித் துயரம் தீர்த்த *
மாதவனார் வட கொங்கில் வானியாற்றின் *
வண்ணிகை நன்னடங் கண்டு மகிழ்ந்து வாழும்
போது * இவை நாம் பொன்னயிந்தை நகரில் முன்னாள் *
புணராத பரமதப் போர் பூரித்தோமே. (2)

54: ##
திகிரி மழுவுயர் குந்தம் தண்டு அங்குசம் பொறி *
சிதறு சதமுக அங்கி வாள் வேல் அமர்ந்ததும் *
தெழி பணில சிலை கண்ணி சீரங்க செவ்வடி *
செழிய கதை முசலந்தி சூலங் திகழ்ந்ததும் *

அகில உலகுகள் கண்டை யாய் ஓர் அலங்கலில் *
அடைய அடைவில் இலங்க வாசின்றி நின்றதும் *
அடியும் அருகணையும் அரவாம் என்ன நின்று * அடி
அடையும் அடியரை அன்பினால் அஞ்சலென்பதும் /

மகிழும் அமரர் கணங்கள் வானம் கவர்ந்திட *
மலியும் அசுரர் புணர்த்த மாயம் துரந்ததும் *
வளரும் அணி மணி மின்ன வான் அந்தி கொண்டிட *
மறை முறை முறை வணங்க மாறின்றி வென்றதும் *

சிகி  இரவி மதியம் உமிழ் தேசு உந்த எண் திசைத் *
திணி மருள் செகவுகந்து சேமங்கள் செய்ததும் *
திகழரவணை அரங்கர் தேசு என்ன மன்னிய *
திரி சுதரிசனர் செய்ய ஈர் எண் புயங்களே. (2)

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: